# அருப்புக்கோட்டை நகராட்சி

**விகாரி ஆண்டு கார்த்திகை மாதம் நாள் : 06.12.2019 வெள்ளிக் கிழமை காலை 11.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் தனி அலுவலர் அறையில் நடைபெற்ற நகர்மன்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை :– திரு.கா.சேர்மக்கனி M.Tech., தனி அலுவலர்**

**பொருள் 1 :** நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர் (பொ) நவம்பர் – 2019 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும்

**அலுவலககுறிப்பு:**

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**தீர்மானம் :**

பதிவு செய்யப்பட்டது.

**தீர்மான எண்.816**

**பொருள் 2 :** அருப்புக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு A, பிளாக் 20, நகரளவு எண் 82/1, 79/2(P+)ல் 0.966 ஏக்கர் (3909.20 சமீ) பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற மனைப்பிரிவை அரசாணை எண்கள் 78,172, H&UD நாள் 04.05.2017 மற்றும் 13.10.2017ன்படி வரன்முறைப்படுத்த கோரி திரு.P.பொன்னுச்சாமி மற்றும் நால்வர் என்பவர்களது விண்ணப்பித்ததன் பேரில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மதுரை அவர்களால் ம.வ(மு)/ந.ஊ.து.இ (மம) எண் 491/2019 நாள் 23.10.2019 கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட பூங்கா மற்றும் சாலை இடத்தினை ஆவண எண் 5944/2019 நாள் 04.12.2019ல் மனுதாரர்களால் நகராட்சிக்கு தானமாக வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பூங்கா மற்றும் சாலை இடத்தினை நகராட்சி ஏற்று அசையாச் சொத்து பதிவேட்டில் பதிவு செய்யலாம்.

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.7055/2019/எப்1

**தீர்மானம் :**

அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.817**

**பொருள் 3 :** அருப்புக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு F, பிளாக் 9, நகரளவு எண் 7/1, 2A,2பி (பகுதி), 2சி சர்வே எண்கள் 279/1 பகுதி, 2 பகுதி, 3A, 3பி (பகுதி), 3சில் 8.16 ஏக்கர் (33032.19சமீ) பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற மனைப்பிரிவை அரசாணை எண்கள் 78,172 H&UD நாள் 04.05.2017 மற்றும் 13.10.2017ன்படி வரன்முறைப்படுத்த கோரி திரு.J.ராஜேந்திரன் மற்றும் திரு.S.ராமகிருஷ்ணன் என்பவர்கள் விண்ணபித்ததன் பேரில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மதுரை அவர்களால் ம.வ.(மு)/ந.ஊ.து.இ(மம)எண் 490/2019 நாள் 09.10.2019ல் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட பூங்கா மற்றும் சாலை இடத்தினை ஆவண எண் 4823/2012 நாள் 13.10.2012, ஆவண எண் 5742/2019 நாள் 27.11.2019 ஆவண எண் 5722/2019 நாள் 26.11.2019 ஆவண எண் 5723/2019 நாள் 26.11.2019ல் மனுதாரர்களால் நகராட்சிக்கு தானமாக வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பூங்கா மற்றும் சாலை இடத்தினை நகராட்சி ஏற்று அசையாச் சொத்து பதிவேட்டில் பதிவு செய்யலாம்.

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.6784/2019/எப்1

**தீர்மானம் :**

அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.818**

**பொருள் 4 :** நகராட்சிகளில் 20 ஆண்டுகாலம் மாசற்ற முறையில் பணிபுரிந்த ஊர்தி ஓட்டுநர்களுக்கு தங்கப்பதக்கம் மற்றும் நற்சான்றிதழ் வழங்கும் பொருட்டு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.4980/2018/ஜே3, நாள் 12.07.2019ல் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மேற்படி கடிதத்தில் அருப்புக்கோட்டை நகராட்சி ஊர்தி ஓட்டுநர் திரு.வே.கொப்பையன் என்பரை மேற்படி தங்கபதக்கம் மற்றும் நற்சான்றிதழ் பெறுவதற்கு தகுதியானவர் என தெரிவித்து பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்படி தங்கப்பதக்கம் வழங்குவதற்கான செலவை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவழிக்க வழிவகைசெய்ய தெரிவித்துள்ளதால் மேற்படி தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.4925/2019/சி1

**<u>தீர்மானம் :</u>**

அனுமதிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.819</u>**

**பொருள் 5 :** அருப்புக்கோட்டை போலீஸ் குவார்ட்டர்ஸ் பின்புறம் உள்ள OHT–யில் இருந்து மலையரசன் கோவில் கிழமேல் தெரு வரை பகிர்மான குழாய் பதிக்கும் பணி (போலீஸ் குவார்ட்டர்ஸ் பின்புறம் உள்ள OHT–யில் இருந்து மலையரசன் கோவில் தெரு வரை) மதிப்பீட்டு தொகை ரூ.50.00 இலட்சத்துக்கு இந்நகர்மன்றத் தீர்மான எண்.789, நாள்.25.10.2019ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதன்பேரில் மேற்கண்ட பணிக்கு 28.11.2019 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **<u>வ.எண்</u>** | **<u>ஒப்பந்தகாரர் பெயர்</u>** | **<u>ஒப்பந்தப்புள்ளி விபரம்</u>** |
|---|---|---|
| 1. | திரு.S.K.சுப்பாரெட்டியார் அருப்புக்கோட்டை | 4.99 % மதிப்பீட்டு விலையை விட அதிகமாக |
| 2. | திரு.N.எர்ஷாத்கான் அருப்புக்கோட்டை | 11.88 % மதிப்பீட்டு விலையைவிட அதிகமாக |

**அலுவலகக் குறிப்பு :–**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விலையை விட 4.99 சதவீதம் அதிகமாக கொடுத்துள்ள திரு.S.K.சுப்பாரெட்டியார், ஒப்பந்ததாரர் அருப்புக்கோட்டை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ளலாம்.

ந.க.எண்.6471/2019/இ1

**<u>தீர்மானம் :</u>**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.820</u>**

**பொருள் 6 :** அருப்புக்கோட்டை போலீஸ் குவார்ட்டர்ஸ் பின்புறம் உள்ள OHT–யில் இருந்து பகிர்மான குழாய் பதிக்கும் பணிக்கு (மலையரசன் கோவில் தெரு முதல் விருதுநகர் மெயின் ரோடு தமிழ்மணி தியேட்டர் அருகில் வரை) மதிப்பீட்டு தொகை ரூ.35.00 இலட்சத்துக்கு இந்நகர்மன்றத் தீர்மான எண்.790, நாள்.25.10.2019ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதன்பேரில் மேற்கண்ட பணிக்கு 28.11.2019 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **<u>வ.எண்</u>** | **<u>ஒப்பந்தகாரர் பெயர்</u>** | **<u>ஒப்பந்தப்புள்ளி விபரம்</u>** |
|---|---|---|
| 1. | திரு.S.K.சுப்பாரெட்டியார் அருப்புக்கோட்டை | 4.99 % மதிப்பீட்டு விலையை விட அதிகமாக |
| 2. | திரு.N.எர்ஷாத்கான் அருப்புக்கோட்டை | 18.32 % மதிப்பீட்டு விலையைவிட அதிகமாக |

**அலுவலகக் குறிப்பு :—**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விலையை விட 4.99 சதவீதம் அதிகமாக கொடுத்துள்ள திரு.S.K.சுப்பாரெட்டியார், ஒப்பந்ததாரர் அருப்புக்கோட்டை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ளலாம்.

ந.க.எண்.6761/2019/இ1

**தீர்மானம் :**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.821**

**பொருள் 7 :** அம்மா உணவகத்திற்கு தேவையான டோக்கன்கள் Tami Nadu Multi Purpose indco service, Thiruchi-08 கூட்டுறவு அச்சகத்திலிருந்து வாஙகிடவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.1,25,000/— (ஒரு லட்சத்து இருபத்தைந்தாயிரம் மட்டும்) வரை செலவுகள் செய்ய கூட்ட அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :—**

அவசர அவசியம் கருதி ஆணையாளர் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழஙகியதை அஙகீகரிக்கலாம்.

ந.க.எண்.7811/2019/பி4

**தீர்மானம் :**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.822**

**பொருள் 8 :** அருப்புக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட 1 முதல் 36 வார்டுகளில் உள்ள தெருவிளக்கு பராமரிப்பு பணிகளை தனியார் நிறுவனம் மூலம் மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண் 1400, நாள் 29.07.2013ல் நிர்வாக அனுமதி வழஙகப்பட்டது. அதன் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஸ்ரீசுதர்சனா இன்ஜினியரிங ஓர்க்ஸ் நிறுவனம் வழஙகிய குறைந்த ஒப்பந்தப்புள்ளியானது ஏற்கப்பட்டு இந்நகர்மன்ற தீர்மான எண் 2275 நாள் 28.08.2015ன்படி 01.10.2015 முதல் 30.09.2018 வரை தெருவிளக்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள உத்தரவு வழஙகப்பட்டது. தற்பொழுது மேற்படி நிறுவனத்தாருக்கு வழஙகப்பட்ட பராமரிப்பு காலம் 30.09.2018 உடன் முடிவடைந்துவிட்டது.

மேலும் அரசாணை எண் 39 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறை (ந.நி—IV) நாள் 21.04.2017ன் படி, நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.35871/2014/இ1 நாள்27.04.2017ல் தெரிவித்துள்ளவாறு இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அனைத்து விளக்குகளையும் Energy Saving Lamps (LED Lights) and Engergy saving measureing அமைக்க மின்சேமிப்பு கணக்கீட்டு முகவர்கள் (Investment Grade Audit Agency) நியமனம் செய்யப்பட்டு திட்ட அறிக்கை தயார் செய்யும் பணி நடைபெற்றுவருகிறது. மேற்படி திட்டமானது விரைவில் நடைமுறை படுத்தப்பட உள்ளது. மேற்கண்டவாறு தெருவிளக்கு பராமரிப்பு பணிகளை மேலும் 3 ஆண்டுகளுக்கு தனியார் நிறுவனம் மூலம் மேற்கொள்ள வழிவகை இல்லாத சூழ்நிலையில் தெருவிளக்கு பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டிய அவசர அவசியம் கருதி இவ்வலுவலக தீர்மான எண் 525 நாள் 08.10.2018 ன்படி அதே விலைவிகிதத்திலேயே ஸ்ரீசுதர்சனா இன்ஜினியரிங ஓர்க்ஸ் நிறுவனத்திற்கு 08.10.2018 முதல் 31.12.2018 வரை மூன்று மாதஙகளுக்கும், இவ்வலுவலக தீர்மான எண் 578 நாள் 11.12.2018 ன்படி 01.01.2019 முதல் 30.06.2019 வரை ஆறு மாதஙகளுக்கும் மேலும் இவ்வலுவலக தீர்மான எண் 729 நாள் 29.07.2019 ன்படி 01.07.2019 முதல் 31.12.2019 வரை ஆறு மாதஙகளுக்கும் பணிகளை மேற்கொள்ள காலநீடிப்பு செய்து வேலைஉத்தரவு வழஙகப்பட்டு பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

தற்சமயம் மேற்கண்டவாறு காலநீட்டிப்பு செய்யப்பட்டு ஆறு மாதஙகள் டிசம்பர் மாதத்தோடு முடிவடைய உள்ளதால் தெருவிளக்கு பணியின் அவசர அவசியம் கருதியும், உள்ளாட்சி தேர்தலை கருத்தில் கொண்டும் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட அதே விலை விகிதத்திலேயே மேலும் ஆறு மாதஙகளுக்கு தொடர்ந்து தெருவிளக்கு பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள மேற்படி ஸ்ரீசுதர்சனா இன்ஜினியரிங ஓர்க்ஸ் நிறுவனம் சம்மதம் தெரிவித்து கடிதம் வழஙகியதன் அடிப்படையில் 01.01.2020 முதல் மேலும் ஆறு மாதஙகளுக்கு கால நீட்டிப்பு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் ஒப்புதல் வழஙகலாம். ந.க.எண்.6380/2013/இ2

**தீர்மானம் :**

அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.823**

**பொருள் 9 :** இந்நகராட்சிக்கு சொந்தமான பொறியியல் பிரிவு ஸ்கார்ப்பியோ வாகன எண் : TN 67 AJ 2135ல் பராமரிப்பு பணிகளை மகேந்திரா அங்கீகாரம் பெற்ற நிறுவனமான டி.வி.எஸ். கப்பலூர், மதுரை நிறுவனத்தாரின் மூலம் மேற்கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதிக்கலாம் ந.க.எண்.7839/2019/இ1

**<u>தீர்மானம் :</u>**

அனுமதிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.824</u>**

**பொருள் 10 :** அருப்புக்கோட்டை நகராட்சிக்கு உட்பட்ட வார்டு பகுதிகளில் மழை மற்றும் வாகன போக்குவரத்து காரணமாக சேதமடைந்த நெசவாளர் காலனி 14வது தெரு, இரட்டைபடை மாரியம்மன் கோவில் தெரு, முஸ்லீம் தெரு, மாதர் முன்னேற்ற சங்கம் தெரு, கெங்கை முத்து நாடார் தெரு, பாரதிதாசன் தெரு, ஞானியர் மெயின் தெரு, தெற்கு தெரு, குழந்தைவேல்புரம் தெரு ஆகிய தெருக்களில் சேதமடைந்த பாலஙகளை சீரமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.2,25,000/– யை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.7821/2019/இ1

**<u>தீர்மானம் :</u>**

அனுமதிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.825</u>**

**பொருள் 11 :** அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட 36 வார்டுகளில் அமைக்கப்பட்டுள்ள 735 அடிகுழாய்களுக்கு பராமரிப்பு பணி செய்ய உதிரிபாகஙகள் GI pipe, GI Coupler, Connecting rod ஆகிய பொருட்களை TANSI TOOLS & ENGG. WORKS நிறுவனம் மூலம் விநியோகம் செய்ய ரூ.7,44,976/–க்கு விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது. தற்போது உள்ள வறட்சியினை கருத்தில் கொண்டு உடனடியாக மேற்கண்ட உதிரிபாகஙகள் வாஙகும் பணியை குடிநீர் வடிகால் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.6503/2019/இ1

**<u>தீர்மானம் :</u>**

அனுமதிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.826</u>**